சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திருமதி. ஆர். சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்.,

| | | | |
|---|---|---|---|
| ம.சா. | 2 | நாள் : 09.06.2026 | |
| LAOP. No. | 360/2023 | | |
| பெயர் | சங்கீதா | த/பெ | ராஜாங்கம் |
| வயது | 24 | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| கிராமம் | வழுவூர் | தாலூக்கா | குத்தாலம் |

சாட்சி அழைக்கப்பட்டு திருமதி. அமுதப்பிரியா, இருக்கை எழுத்தர் நிலை – II என்பவரால் உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் கிராம நிர்வாக அலுவலராக வழுவூர் கிராமத்தில் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க அழைப்பாணை வந்ததன்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். வழுவூர் கிராமத்தில் புல எண். 5/1 என்பது அப்துல் ஹமீது என்பவரின் பெயரில் உள்ளது. அந்த இடத்திற்கு மேற்கில் திருவாரூர் – மயிலாடுதுறை பிரதான சாலை உள்ளது என்றால் சரிதான். பிரதான சாலைக்கு மேற்கில் வழுவூர் கிராமம் உள்ளது என்றால் சரிதான். திருவாரூர் – மயிலாடுதுறை பிரதான சாலையை விரிவாக்கம் செய்ய வழுவூர், பண்டாரவாடை கிராமங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பண்டாரவாடை கிராமத்தில் ஹாஜாமைதீன் என்பவருக்கு புல எண் 163/21ல் நிலம் உள்ளது. அது அப்துல் ஹமீது நிலத்திற்கு நேர்மேற்கில் உள்ளது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை

இல்லை.

கிராம நிர்வாக அலுவலர்,
20. வழுவூர் கிராமம்
குத்தாலம் வட்டம்.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதுவே என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை